# மின்னல் தாக்கங்களின் போது பாதுகாப்பாக இருங்கள்

v 1.0 - 21/05/2020

முன்னெச்சரிக்கை எதுவுமின்றி மின்னல் தாக்கம் என்பது அடிக்கடி ஏற்படக்கூடும், குறிப்பாக வருடத்தின் அதிக வெப்பமான மாதங்களில் இது நிகழும். மின்னல் தாக்கங்களுடன் ஏற்படும் இடியுடன் கூடிய மழை, மக்களுக்கும் பாதுகாப்புக்கும் பெரும் ஆபத்தை ஏற்படுத்துவதாக அமைந்திருக்கும்.

COVID-19 தொற்றுப் பரவும் காலப்பகுதியில், மடிக்கணனிகள் மற்றும் மொபைல் தொலைபேசிகள் போன்றவற்றை நாம் பெருமளவில் பயன்படுத்துகின்றோம். இவ்வாறான காலப்பகுதியில் நாம் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும். கீழே தரப்பட்டுள்ள எளிமையான வழிகாட்டல்களை பின்பற்றி, உங்களையும் உங்கள் அன்புக்குரியவர்களையும் மின்னல் தாக்கங்களிலிருந்து எவ்வாறு பாதுகாத்துக் கொள்வது என்பதைப் பற்றி அறிந்து கொள்ளுங்கள்.

# உள்ளகப் பகுதியில் நான் இருந்தால் எவ்வாறு என்னை நான் பாதுகாத்துக் கொள்வது?



- வீட்டிலிருந்து உங்கள் மடிக்கணனியில் பணியாற்றும் போது அல்லது ஒன்லைன் சந்திப்பொன்றில் பங்கேற்கும் போது, குறிப்பாக மழை முகில்கள் திரண்டு காணப்படும் சந்தர்ப்பங்களில் வானிலை தொடர்பில் கவனம் செலுத்துங்கள்.

- இடியுடன் கூடிய மழை வலுவடையும் முன்னதாக உங்கள் மடிக்கணனியை நன்கு சார்ஜ் செய்து கொள்ளுங்கள். உங்கள் மடிக்கணனியில் இணைய இணைப்பை பேணுவதற்கு டொங்கிள் அல்லது விங்கிளை மாத்திரம் USB ஊடாக பயன்படுத்துங்கள்.

- மின்னல் தாக்கங்கள் ஏற்படும் போது இலத்திரனியல் சாதனங்கள் எதனையும் பயன்படுத்த வேண்டாம். அவற்றை மின்சுற்றிலிருந்து கழற்றி வைக்கவும். வாயு குளிரூட்டிகள், கணனிகள், தொலைக்காட்சிகள் மற்றும் ஏனைய மின் சாதனங்களை மின்தாக்கங்களிலிருந்து பாதுகாக்கும் வகையில் அவற்றை மின்சுற்றிலிருந்து கழற்றி வைக்கவும்.

- வயர்களிலான தொலைபேசிகளை பயன்படுத்த வேண்டாம்.

- குளியலை தவிர்க்கவும்.

- இரும்பு கதவுகள் மற்றும் ஜன்னல்களிலிருந்து தூர இருக்கவும்.

# நான் வெளிப்பகுதியில் இருக்கும் போது கூரையுடன் கூடிய பகுதி ஏதும் இருக்காவிடின் என்ன செய்ய வேண்டும்?

- உங்களிடம் இரும்பு பொருட்கள் ஏதும் இருப்பின், அவற்றை தூர எறியவும்.

- உயரமான மரங்களிலிருந்து தூரமாக இருக்கவும்.

- நிலத்தில் அமர வேண்டாம். நுனிக்கால்களில் நிற்பதன் மூலம், நிலத்துடன் ஏற்படக்கூடிய தொடுகையை குறைத்துக் கொள்ளவும், காதுகளுக்கு மேலாக கைகளை வைத்து, தலையை பாதங்களினுள் வைக்கவும்.

- நீச்சலில் ஈடுபட்டிருந்தால், நீந்தினால் அல்லது நீர் தடாகத்துக்கு அருகே இருந்தால் உடனே நீரிலிருந்து வெளியேறவும்.

- கூடாரங்கள் ஏதும் காணப்படாவிடின், மிகவும் உயரமான பகுதியாக நீங்கள் இருப்பதை தவிர்க்கவும்.

- திறந்த வெளிகள், உயர பகுதிகள், கைவிடப்பட்ட மரங்கள் மற்றும் தொடர்பாடல் கோபுரங்களை தவிர்த்துக் கொள்ளவும்.



# மின்னல் தாக்கத்தினால் அதிகளவு பாதிக்கப்படக்கூடிய சாதனங்கள் யாவை?


**தொலைத்தொடர்பாடல் சாதனம்**
தொலைபேசி கட்டமைப்புகள் மற்றும் Fax இயந்திரங்கள்.

**வெளியக சாதனங்கள்**
CCTV கட்டமைப்புகள், திருட்டு எச்சரிக்கை மற்றும் தீ அலாரம்கள்.


**வீட்டுபாவனை மின் சாதனங்கள்**
ஓடியோ மற்றும் வீடியோ சாதனம்.

**கணனிகள் மற்றும் டேடா ஊடுகடத்தும் சாதனம்**
கணனிகள், மொடம்கள், விங்கிள்கள், சுவிட்ச்கள் மற்றும் ரவுடர்கள்.

**இயந்திரங்களின் இலத்திரனியல் கட்டுப்படுத்தல்கள்**



# மின்னல் தாக்கங்களிலிருந்து எவ்வாறு எனது சாதனங்களை பாதுகாத்துக் கொள்வது?



- மின்னல் தாக்கம் ஏற்படுவதற்கான அறிகுறிகள் காணப்பட்டால், வீட்டு/அலுவலக மின்சாதனங்களை அவற்றின் ஆளிகளிலிருந்து அகற்றிக் கொள்ளவும். நாளின் இறுதியில் உறங்கச் செல்லும் முன்/அலுவலகத்தை மூடும் முன் இதை கண்டிப்பாக மேற்கொள்ளவும்.


- உங்கள் கட்டிடம் உயர்வானதாகவும், வெளிப்பகுதிக்கு வெளிப்படுத்தப்பட்டிருந்தால், இடிதாங்கி ஒன்றை பொருத்திக் கொள்ளவும், இதனூடாக மின்னல் தாக்கத்தை பாதுகாப்பாக புவிக்கு செலுத்திக் கொள்ள முடியும்.

- இரும்பு குழாய்கள், பாதுகாப்பு இரும்பு ஆமர் ஆகியவற்றினூடாக சகல உள்வரும் சேவை வடங்களையும் ஒன்றிணைத்து, பொது புவி வடத்துடன் இணைக்கவும்.

- பெருமளவு மின்சாரம் கடத்தப்படுவதால், அவற்றில் சடுதியாக அளவுக்கதிமான ஓட்டம் ஏப்டும் போது ஆபத்தான காந்தப்புலங்கள் உருவாகக்கூடும் என்பதால், உங்கள் சாதனங்கள்/விங்கிள்களை இனங்கண்டு, அவற்றை மின்னல் கொண்டக்டர்கள், அன்டெனா மாஸ்ட்கள் மற்றும் மின் வடங்களிலிருந்து தூரமாக வைக்கவும்.

- உணர்திறன் மிக்க இலத்திரனியல் சாதனங்களை பாதுகாத்துக் கொள்ள surge பாதுகாப்பு சாதனங்களை பொருத்திக் கொள்ளவும். உங்களிடம் ஏற்கனவே காணப்படும் சாதனங்களின் முறையான செயற்பாட்டை பரிசோதித்துக் கொள்ளவும். பழுதடைந்திருந்தால் அவற்றை மாற்றிக் கொள்ளவும்.

- கணனி மற்றும் டேடா ஊடுகடத்தும் சாதனங்களை கட்டிடங்களினுள் அசாதாரணமாக பாயும் மின்னூட்டல்கள் அல்லது நீடித்த இணைப்புகளிலிருந்து பாதுகாத்திட ஃபைபர் ஒப்டிக் கேபிள்களை பயன்படுத்தவும்.




**ஃபெயார்ஃபஸ்ட் இன்சூரன்ஸ் லிமிடெட்**

ஹொட்லைன்: 0112 428 428 | இணையத்தளம்: www.fairfirst.lk